# திருநெல்வேலி மாநகராட்சி

## 30.06.2022 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்ட பொருட்கள் மற்றும் தீர்மானங்கள் விவரம்

---

## பொருட்கள்

**1)** திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் 9 எண்ணம் நகர்புற ஆரம்பசுகாதார நிலையங்களை மேம்படுத்தும் பணிக்கு ரூ.9.92 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 16வது சீர்மிகு நகர இயக்குநர்கள் கூட்டத்தில் வரிசை எண்.5ல் தீர்மானிக்கப்பட்டதின் அடிப்படையிலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.13393/2018/IHSDP-1-2 நாள்:05.10.2021ல் ரூ.9.92 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், முதன்மை தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண.28115/2021/EA1 நாள 19.11.2021ல் ரூ.9.92 கோடிக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின் படியும் மேற்படி திட்டப்பணியினை மேற்கொள்வதற்கு மெசர்ஸ்.Chendur Infrastructure Private Limited சென்னை வேலை ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. மேற்பணியான நகர்புற ஆரம்பசுகாதார நிலையங்களை மேம்படுத்தும் பணிக்கு கீழ்கண்ட மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவம் சம்பந்தப்பட்ட இதர உபகரணங்கள் கொள்முதல் செய்ப்பபட உள்ளது.

1.ECG-12 Channel

2.Ultra Sound Scan Machine with Four Probes

3.Portable X Ray Machine

4.Dialysis Machine

5.Auto Analyser

மேற்குறிப்பிட்ட மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவம் சம்பந்தப்பட்ட இதர உபகரணங்களை தமிழ்நாடு மருத்துவ குழு (Tamil Nadu Medical Services Corporation Ltd)–ல் இருந்து கொள்முதல் செய்வதற்கு மாமன்ற அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு :**

பொருளில் குறிப்பிட்டுள்ளப்படி திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் 9 எண்ணம் நகர்புற ஆரம்பசுகாதார நிலையங்களை மேம்படுத்தும் பணிக்கு ரூ.9.92 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு பணிகள் நடைபெற்று வரும் நிலையில் மேற்படி ஆரம்பசுகாதார நிலையங்களுக்கு தேவையான மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவம்

சம்பந்தப்பட்ட இதர உபகரணங்களை தமிழ்நாடு மருத்துவ குழு(Tamil Nadu Medical Services Corporation Ltd)-ல் இருந்து கொள்முதல் செய்வதற்கு மாமன்றம் முன் அனுமதி அனுமதிக்கலாம்.

**(ஓ.பு.அ.எண். 5/திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் 2021-22/SCM)**

**தீர்மானம் எண்: 41 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.**

---

**2)** திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டல அலுவலகத்திற்கு உட்பட்ட கீழ்காணும் உரிம இனம் வ.எண்: 2க்கு 2022-2025 -ம் ஆண்டிற்கான உரிமமானது அரசாணை எண்-78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.25.05.2009-ன் படி ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு (ஒவ்வொரு ஆண்டிற்கும் முந்தைய ஆண்டு உரிமத்தொகையில் 5%உயர்வுடன்) அனுபவித்துகொள்ளும் வகைக்கு 19.05.2022 அன்றுபொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளிநடைபெற்றது.

| உரிம எண் (1) | உரிம இனம் (2) | பெயர் / முகவரி (3) | வைப்புத்தொகை/ கூடுதல் வைப்புத்தொகைவிபரம் ரூ. (4) | குறுமத் தொகை ரூ. (5) | உச்ச கேள்வித் தொகை ரூ. (6) |
|---|---|---|---|---|---|
| 2 | பாளையங்கோட்டை மண்டலம் அலுவலகத்திற்கு உட்பட்டசமாதானபுரம் அருகில் உள்ளநவீன கட்டணகழிப்பிடத்தில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | திரு.C.பாலகிருஷ்ணன், த/பெ. சந்திரன், SF-L-13 - லக்கிகாலனி, பெருமாள்புரம் பாளையங்கோட்டை, திருநெல்வேலி. | 1.ஏலவைப்புத் தொகை ரூ.25,000/- 2. ஏலகூடுதல் வைப்புத் தொகை ரூ.25,000/- | ரூ.92,000/- | ரூ.1,80,100/- |
| | | திரு.ஏ.மாரியப்பன், த/பெ. வேல்சாமி, 103,மூனீஸ்வரன் கோவில் தெரு,கண்டியப்பேரி, திருநெல்வேலி. | 1.ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை ரூ.25,000/- 2. ஒப்பந்தப்புள்ளி கூடுதல் வைப்புத் தொகை ரூ.25,000/- | ரூ.92,000/- | ரூ.1,73,375/- |

மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு நபர்களில் திரு.வே.மாரியப்பன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகையைவிட திரு.C.பாலகிருஷ்ணன் என்பவர் ஏலத் தொகை கூடுதலாக உள்ளது. மேற்படி தொகையானது குறுமத்தொகையை விட ரூ.88,100/- கூடுதலாக உள்ளது. எனவே திரு.C.பாலகிருஷ்ணன் என்பவருக்கு ஒப்படைக்கும் நாள் முதல் மேற்கண்ட உரிமத்தை மூன்று ஆண்டுகளுக்கு அனுபவித்து கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

பொருளில் கண்டவாறு பாளையங்கோட்டை மண்டல அலுவலகத்திற்கு உட்பட்ட சமாதானபுரம் அருகில் உள்ளநவீனகட்டணகழிப்பிடத்தில் நிர்ணயிக்கப்பட்டகட்டணம் வசூல் செய்யும் உரிமத்தினைதிரு.C.பாலகிருஷ்ணன் என்பவருக்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு (ஒவ்வொரு ஆண்டிற்கும் முந்தைய ஆண்டு உரிமத்தொகையில் 5% உயர்வுடன்) அனுபவித்து கொள்ளமாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.அ1/826/2022 (பா.ம)

## தீர்மானம் எண்: 42 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

---

**3)** திருநெல்வேலி மாநகராட்சி நான்கு மண்டல அலுவலகங்கள், சந்திப்பு பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மை பணிகளை சுய உதவிக் குழுக்கள் மூலம் 645 நபர்கள் மாமன்ற தீர்மானம் எண். 112 நாள்: 29.10.2018ன்படி அனுமதி வழங்கப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மாமன்ற தீர்மான எண். 04 நாள்: 11.04.2022ன்படி மேற்படி பணியாளர்களின் பணிக்காலம் 13.6.2022 தேதியுடன் முடிவடைவதால், மேற்படி பணியாளர்களின் பணியின் அவசியத்தை முன்னிட்டு கீழ்க்கண்டுள்ள விபரப்படி 41 சுய உதவிகுழுக்கள் மூலம் பணிபுரிந்து வரும் 653 நபர்களை 16.6.2022 முதல் 11.09.2022 வரை மேலும் 88 நாட்களுக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணிபுரிய அனுமதிக்கவும், அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | சுய உதவிக் குழுவின் பெயர் | உறுப்பினர்களின் எண்ணிக்கை | பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வார்டு அலுவலகம் |
|---|---|---|---|
| 1 | அக்னி சிறகுகள் சுகாதாரப் பணிக்குழு | 26 | திருநெல்வேலி வார்டு |
| 2 | அக்னி பறவைகள் சுகாதாரப் பணிக்குழு | 23 | திருநெல்வேலி வார்டு |
| 3 | தாமிரபரணி சுகாதாரப் பணிக்குழு | 20 | திருநெல்வேலி வார்டு |
| 4 | அருந்ததியர் சுகாதாரக் குழு | 25 | திருநெல்வேலி வார்டு |
| 5 | சாரா சுகாதார சுய உதவிக் குழு | 26 | திருநெல்வேலி வார்டு |
| 6 | வெண்ணிலா சுகாதாரப் பணிக்குழு | 23 | தச்சநல்லூர் மண்டலம் |
| 7 | பசுமை சுகாதாரப் பணிகுழு | 12 | தச்சநல்லூர் மண்டலம் |
| 8 | ஸ்ரீஜெயம் சுகாதார பணிக்குழு | 15 | தச்சநல்லூர் மண்டலம் |

| | | | |
|---|---|---|---|
| 9 | காந்திஜி சுகாதரப் பணிக்குழு | 11 | தச்சநல்லூர் மண்டலம் |
| 10 | ஸ்ரீ போராட்சிஅம்மன் ஆண்கள் குழு | 20 | தச்சநல்லூர் மண்டலம் |
| 11 | ஸ்ரீ உலகம்மன் சுகாதாரப் பணிக்குழு | 10 | தச்சநல்லூர் மண்டலம் |
| 12 | ஸ்ரீ முத்தாரம்மன் ஆண்கள் பணிக்குழு | 19 | தச்சநல்லூர் மண்டலம் |
| 13 | வடக்கத்தி மாரியம்மன் சுகாதாரக் குழு | 20 | தச்சநல்லூர் மண்டலம் |
| 14 | APJ. அப்துல் கலாம் ஆண்கள் குழு | 10 | தச்சநல்லூர் மண்டலம் |
| 15 | TMC 40 சுகாதார சிறப்பு பணிக்குழு | 12 | ராமையன்பட்டி உரகிடங்கு தச்சநல்லூர் மண்டலம் |
| 16 | ஸ்ரீசெல்வ விநாயகர் சுகாதாரப்பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 17 | ஸ்ரீ காளியம்மன் சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 18 | தந்தை பெரியார் சுகாதாரப் பணிக்குழு | 13 | பாளை மண்டலம் |
| 19 | ஆதி சக்தி சுகாதாரப் பணிக்குழு | 13 | பாளை மண்டலம் |
| 20 | அன்னை இந்திரா மகளிர் சுயஉதவிக் குழு | 18 | பாளை மண்டலம் |
| 21 | டாக்டர் அம்பேத்கார் ஆண்கள் குழு | 23 | பாளை மண்டலம் |
| 22 | தளபதி ஒண்டிவீரன் சுயஉதவிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 23 | மகாராஜா ஆண்கள் சுயஉதவிக்குழு | 15 | பாளை மண்டலம் |
| 24 | ஓம்சக்தி சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 25 | முத்தாரம்மன் சுயஉதவிக்குழு | 10 | பாளை மண்டலம் |
| 26 | ஸ்ரீ அன்னை தெரசா சுயஉதவிக்குழு | 14 | பாளை மண்டலம் |
| 27 | நேருஜி ஆண்கள் சுகாதாரக் குழு | 14 | மேலப்பாளையம் மண்டலம் |
| 28 | மங்களஈஸ்வரி பெண்கள் சுயஉதவிக்குழு | 21 | மேலப்பாளையம் மண்டலம் |

| | | | |
|---|---|---|---|
| 29 | பாரதி ஆண்கள் சுய உதவிக்குழு | 19 | மேலப்பாளையம் மண்டலம் |
| 30 | செங்கை வாஞ்சிநாதன் சுகாதாரக் குழு | 18 | மேலப்பாளையம் மண்டலம் |
| 31 | மங்கள விநாயகர் ஆண்கள் சுய உதவிக்குழு | 16 | மேலப்பாளையம் மண்டலம் |
| 32 | செந்தமிழ் மகளீர் சுய உதவிக்குழு | 10 | மேலப்பாளையம் மண்டலம் |
| 33 | சுபாஷ் சந்திரபோஸ் சுகாதாரப்பணிக்குழு | 12 | மேலப்பாளையம் மண்டலம் |
| 34 | நேதாஜி சுய உதவிக்குழு | 14 | மேலப்பாளையம் மண்டலம் |
| 35 | செம்மொழி சுய உதவிக்குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| 36 | அன்னை சத்தியா சுயஉதவிக்குழு | 15 | மேலப்பாளையம் மண்டலம் |
| 37 | அன்னை சந்தியா சுயஉதவிக்குழு | 12 | மேலப்பாளையம் மண்டலம் |
| 38 | திருப்பதி சுகாதாரக்குழு | 18 | மேலப்பாளையம் மண்டலம் |
| 39 | காளியம்மன் ஆண்கள் சுகாதாரப்பணிக்குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| 40 | தந்தை பெரியார் ஆண்கள் பணிக்குழு | 16 | மேலப்பாளையம் மண்டலம் |
| 41. | ஸ்டார் சுகாதார பணிக் குழு | 8 | மேலப்பாளையம் மண்டலம் |
| | **மொத்தம்** | **653** | |

மேலும் திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டல பகுதிகளில் 8 குடியிருப்போர் நலச்சங்கமும், பாளையங்கோட்டை மண்டல பகுதியில் 10 குடியிருப்போர் நலச்சங்கமும் மேலப்பாளையம் மண்டல பகுதியில் 14 குடியிருப்போர் நல சங்கங்களிலும் 10 ஆண்டுகளாக ஒப்பந்த அடிப்படையில் நலச்சங்கங்களின் மேற்பார்வையாளரின் கீழ் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்படி நலச்சங்கங்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் 1.1.2018 முதல் ரத்து செய்யப்பட்டு மாநகராட்சி மூலம் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மாநகராட்சியில் பணியாற்றும் நிரந்தர துப்புரவு பணியாளர்களின் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு மண்டல சுகாதார அலுவலர்களால் தெரிவிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களின் தேவைப்பட்டியலின்படி சுய உதவிக்குழு துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள ஏதுவாக கீழ்க்கண்டுள்ள விபரப்படி, சுயஉதவிக் குழு பணியாளர்கள் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணி 01.01.2018 முதல் 88 நாட்களுக்கு மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்ற தீர்மான எண். 13 நாள்: 28.03.2018-ல் அனுமதி பெறப்பட்டு அதன்படி சுய உதவிக்குழுக்களின் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

| வ. எண். | சுய உதவிக் குழுவின் பெயர் | உறுப்பினர்களின் எண்ணிக்கை | பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வார்டு அலுவலகம் |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ பாலாஜி பணிக்குழு | 19 | தச்சநல்லூர் மண்டலம் |
| 2 | வீரத்தாய் சுகாதார பணிக்குழு | 15 | பாளையங்கோட்டை மண்டலம் |
| 3 | பாரதம் சுகாதார பணிக்குழு | 16 | பாளையங்கோட்டை மண்டலம் |
| 4 | கொழும்பு முனியசாமி குழு | 16 | மேலப்பாளையம் மண்டலம் |
| 5 | ஸ்ரீ வேம்படி மாயாண்டி குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| 6 | விஷ்ணு துர்க்கை குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| | மொத்தம் | 100 | |

மேற்படி பணியாளர்கள் பணிக்காலம் மாமன்ற தீர்மானம் எண். 04, நாள்: 11.04.2022ன் பிரகாரம் 06.06.2022 உடன் முடிவடைவதால் மேலும் 09.06.2022 முதல் 04.09.2022 வரை 88 நாட்களுக்கு மேற்படி பணியாளர்களை பணியில் ஈடுபடுத்துவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க. எண். M3/1549/2021 நாள்: 15.6.2021ன் படி நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.411/- என்பதன் அடிப்படையில் ஊதியம் வழங்கவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ள நகராட்சி திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2000 ஐ பின்பற்றி குப்பையினை வீடுவீடாகச் சென்று மக்கும் மற்றும் மக்காத குப்பையாகப் பிரித்து வாங்க வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும். இம்மாநகராட்சியிலுள்ள குறைந்த எண்ணிக்கையிலான துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு மாநகரப் பகுதி முழுவதிலும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. இந்நிலையில் இக்குழுக்களைச் சேர்ந்த நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.411/- என்ற அடிப்படையில் தொகை வழங்குவதால் மாநகராட்சிக்கு ஏற்படும் செலவினம் வெகுவாக குறைகின்றது. மேலும் அரசாணை எண். 69, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.நி3) துறை, நாள்: 4.5.98ன் மூலம் தமிழ்நாட்டில் நகராட்சி சேவைப் பணிகளை தனியார் மயமாக்குதல் குறித்து வெளியிடப்பட்டுள்ள கொள்கைக் குறிப்பில், தனியார்மயமாக்கப்பட வேண்டிய சேவைப்பணிகளுள் திடக்கழிவு மேலாண்மையும் ஒன்று எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நிரந்தர துப்புரவு பணியாளர்கள் பணியமர்த்தினால் செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ. 1,47,00,000 ஆகும். சுய உதவிக் குழுக்களை பணியில் ஈடுபடுத்தினால் செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ. 92,84,490/- ஆகும். மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் மேற்கண்ட 47 சுய உதவிக் குழுக்களை நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.411/- என மாவட்ட ஆட்சித் தலைவரின் செ.மு. ஆணை ந.க.எண். M3/1549/2021 நாள்: 15.6.2021ன் படி தின ஊதியம் அடிப்படையில் மாமன்ற தீர்மான எண்.04 நாள்: 11.04.2022ன்படி முறையே அனுமதி காலம் 18.3.2022 முதல் 13.06.2022 வரை மற்றும் 11.03.2021 முதல் 06.06.2022 உடன் முடியவுள்ள நிலையில் அ)வில் குறிப்பிட்டுள்ள 653 சுய உதவிக் குழு துாய்மை பணியாளர்களுக்கு 16.06.2022 முதல் 11.09.2022 வரை 88 நாட்களுக்கும் ஆ)வில் குறிப்பிட்டுள்ள 100 சுய உதவிக் குழு துாய்மை பணியாளர்களுக்கு

09.06.2022 முதல் 04.09.2022 வரை 88 நாட்களுக்கும் மேற்படி சுயஉதவிக்குழு பணியாளர்களை திடக்கழிவு மேலாண்மைப் பணியில் ஈடுபடுத்தவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். M3/1549/2021 நாள்: 15.6.2021ன் படி துாய்மை பணியாளர்களின் ஊதியம் ரூ.411/- என வழங்கவும் அதற்காகும் மொத்த செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம். மேற்கண்ட சுய உதவிக் குழுக்களுக்கு நிரந்திர துாய்மை பணியாளர்கள், ஒப்பந்தப்பணியாளர்கள் அல்லாத ஒரு வார்டினை ஒதுக்கீடு செய்து அவர்களின் செயல்திறனை ஒப்பிட்டு அடுத்து காலநீட்டிப்பு செய்வது குறித்து முடிவு செய்யலாம். மேலும் ஆணையாளர் அவர்களின் அனுமதிபெற்று, ஸ்டார் சுகாதாரப் பணிக்குழு 8 பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தியமைக்கும், பாரதம் சுகாதார பணிக்குழுவில் கூடுதலாக ஒரு நபரை பணியில் ஈடுபடுத்தியமைக்கும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**ந.க.எண். H2/7560/2017**

## தீர்மானம் எண்: 43 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

---

**4)** திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டலம் வார்டு எண்-11 வண்ணார்பேட்டை ராமலிங்கர் தெரு மத்தியில் மின்சார வாரியத்திற்கு சொந்தமான சிமிண்ட் மின் கம்பத்தில் மின் விளக்கு இல்லாததினால் ஒரு மின் விளக்கு வசதி ஏற்படுத்தி தரக் கோரி திருநெல்வேலி மாநகராட்சி 11-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.எஸ்.கந்தன் அவர்கள் 22.03.2022ம் தேதிய கடிதத்தில் கேட்டுள்ளார். அதன்படி ஒரு தெருவிளக்கு அமைத்திட வேண்டி உள்ளது. மேற்படி மின் கம்பத்தில் மின் வயர்கள் அமைத்து 20W LED பொருத்திட இதற்கான செலவினம் உத்தேசமாக ரூபாய் ரூ.20,000/- ஆகும். எனவே வார்டு 11 மாமன்ற உறுப்பினர் கோரிக்கையின்படி 1 மின் விளக்கு அமைக்க அனுமதிக்காகவும் அதற்காகும் செலவினத்திற்கும் மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு**

திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம் வார்டு எண்-11ல் வண்ணார்பேட்டை ராமலிங்கர் தெரு மத்தியில் மின்சார வாரியத்திற்கு சொந்தமான சிமிண்ட் மின் கம்பத்தில் மின் விளக்கு இல்லாததினால் ஒரு மின் விளக்கு வசதி ஏற்படுத்தி தரக் கோரி திருநெல்வேலி மாநகராட்சி 11-வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையிலும் பொது மக்களின் நலன் கருதி வார்டு எண் 11 வண்ணார்பேட்டை ராமலிங்கர் தெரு மத்தியில் 1 தெருவிளக்கு புதியதாக அமைத்திடவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.20,000/-க்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். இ1-900-2022**

## தீர்மானம் எண்: 44 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

---

**5).** திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டல எல்கைகுட்பட்ட மண்டல அலுவலக வளாகத்தில் உள்ள பழைய பழுதடைந்த குடோனை இடித்து அப்புறபடுத்திவிட்டு புதியதாக நகர்நல மைய கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு ஸமார்ட் சிட்டி திட்டத்தில் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டதில் மேற்படி பழைய கட்டிடத்திலிருந்து பிரித்து எடுக்கப்பட்ட பழைய இரும்பு பொருட்கள் அப்புறப்படுத்த பொது ஏலம் மற்றும் குறுகியகால ஒப்பந்தப்புள்ளி 25.05.2022

அன்று மாலை 4 மணி அளவில் நடைபெற்றது. இதில் ஏல கேள்வி தொகை ரூ.1,42,000/-த்திற்க்கு நிர்ணயம்செய்யப்பட்து. ஏலத்தில் மொத்தம் 45 நபர்கள் கலந்து கொண்டனர். குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 6 நபர்கள் கலந்து கொண்டனர். இதில் திரு.A.K.அலிசேக்மன்சூர் என்பவர் மேற்படி ஏல உச்சஏலக் கேள்வி தொகையாக ரூ.3,00,000/-ற்கு ஏலம் கேட்கப்பட்டது. எனவே திரு.A.K.அலிசேக்மன்சூர் என்பவருக்கு மேற்படி தொகையை செலுத்த அனுமதிக்கவும் அதன் பின்னர் உரிய ஆணை வழங்கவும் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

**அலுவலககுறிப்பு**

திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டல எல்கைகுட்பட்ட மண்டல அலுவலக வளாகத்தில் உள்ள பழைய பழுதடைந்த குடோனை இடித்து அப்புறபடுத்திவிட்டு புதியதாக நகர்நல மைய கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு ஸமார்ட் சிட்டி திட்டத்தில் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டதில் மேற்படி பழைய கட்டிடத்திலிருந்து பிரித்து எடுக்கப்பட்ட பழைய இரும்பு பொருட்கள் அப்புறப்படுத்த பொது ஏலம் மற்றும் குறுகியகால ஒப்பந்தப்புள்ளி 25.05.2022 அன்று மாலை 4 மணி அளவில் நடைபெற்றதில் உச்ச ஏலத் கேள்விதொகையாக திரு.A.K.அலிசேக்மன்சூர் என்பவர் ரூ.3,00,000/-ற்கு கேட்டுள்ளார். எனவே திரு.A.K.அலிசேக்மன்சூர் என்பவருக்கு மேற்படி தொகையை செலுத்தவும் அதன் பின்னர் உரிய ஆணை வழங்கவும் மாமன்ற அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.இ1/6526/2022**

## தீர்மானம் எண்: 45 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

---

**6)** திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டலம் புதிய வார்டு எண் 29 திருநெல்வேலி ஜங்சன் வரதராஜபுரம் பகுதியில் ஒரு தெரு விளக்கு வசதி செய்து கொடுக்கும்படி கேட்டு மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவுக்கு திரு.செல்வம் என்பவர் மனு அளித்ததின் பேரில் மேற்படி தெருவில் ஏற்கனவே அமைந்துள்ள 1 மின் கம்பத்தில் புதியதாக மின் இணைப்பு வயர்கள் அமைத்து 20W LED மின் விளக்கு பொருத்தவும் அதற்காகும் உத்தேச செலவின தொகை ரூ. 20,000/-க்கும் (இருபதாயிரம் மட்டும்) மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு:**

திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம் புதிய வார்டு எண் 29 திருநெல்வேலி ஜங்சன் வரதராஜபுரம் பகுதியில் ஒரு தெரு விளக்கு வசதி செய்து கொடுக்கும்படி கேட்டு மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவுக்கு திரு.செல்வம் என்பவர் மனு அளித்ததின் பேரிலும் மற்றும் பொது மக்களின் நலன் கருதி மின் கம்பத்தில் புதியதாக மின் இணைப்பு வயர்கள் அமைத்து 20W LED மின் விளக்கு ஒன்று புதியதாக அமைத்திடவும், அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.20,000/-க்கும் (இருபதாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:இ1-770-2022.**

## தீர்மானம் எண்: 46 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

---

7) திருநெல்வேலி மாநகராட்சியில் அம்ரூத் (2016-17) திட்டத்தின் கீழ் விடுபட்ட பகுதிகளுக்கு புதை வடிகால் திட்டம் (பகுதி-2) (Phase-II) செயல்படுத்துவதற்கு அரசாணை நிலை எண்.111 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-2) நாள் 25.10.2017 வாயிலாக ரூ.289.01 கோடிக்கு நிர்வாக அனுமதி அளித்துள்ளதின் பேரில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம், சென்னை (TNUIFSL) மூலம் ரூ.289.01 கோடிக்கு மதிப்பிடப்பட்டு, ஆசிய வளர்ச்சி வங்கிக்கு பரிந்துரைக்கப்பட்டதில், விரிவான மதிப்பாய்வு செய்யப்பட்ட பின்னர் விலைக்குறைபாடுகள் (Physical and Price contingencies) காரணமாக ஆசிய வளர்ச்சி வங்கியின் (ADB) விதிமுறைகள்படி ரூ.296.11 கோடிக்கு திட்ட மதிப்பீடு திருத்தப்பட்டு, அதற்கான நிர்வாக அனுமதி அரசாணை நிலை எண்.43 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-2) நாள் 28.2.2019ல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணையின்படி இத்திட்டத்திற்கான மொத்த தொகை ரூ.296.11 கோடியில் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம் (TNUIFSL) சென்னை மூலம் கடன் தொகை ரூ.60.18 கோடியினை TNUDF ஆசிய வளர்ச்சி வங்கியின் கீழ் நிதியுதவியுடன் (ADB assisted Tamil Nadu Urban Flagship Investment Program-TNUFIP–Tranche1) பெறுவதற்கு முதன்மைச் செயலாளர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம், கடித எண். TNUDF/Projects/Tirunelveli UGSS/ Phase–II நாள் 01/03/2019 கடிதத்தின் தெரிவித்துள்ள சிறப்பு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு தொகை ரூ.60.18 கோடி கடன் பெறவும், கடன் ஒப்பந்த பத்திரம் மற்றும் Tripartite Agreement-ல் தெரிவித்த நிபந்தனைகளை ஏற்கவும் 07.03.2019ம் தேதிய மாமன்ற தீர்மான எண்.242-ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது

| Sl.No. | Mean of Finance | Amount (Rs.In Crores) | Percentage |
|---|---|---|---|
| 1 | Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) under ADB assisted TNUFIP (T-1) | 60.18 | 20.32% |
| 2 | Grant from Government of India under AMRUT | 144.51 | 48.80% |
| 3 | Grant from Government of Tamil Nadu under AMRUT | 57.80 | 19.52% |
| 5 | ULB Contribution | 33.62 | 11.36% |
| | **Total** | **296.11** | 100.00% |

மேற்படி TNUIFSL நிதி உதவி மூலம் TNUDF-லிருந்து ADB Assisted TamilNadu Urban Flagship Investment Program-TNUFIP-Tranche-1) கடன் பெறுவதற்கான ஒப்பந்தம் 10.05.2019ல் நிறைவேற்றப்பட்டு (Agreement executed between Tirunelveli Corporation & TNUITCL) 9.05.2022-ல் கடன் பெறுவதற்கான ஒப்பந்தம் காலாவதியானது. எனவே, கடன் பெறுவதற்கான அனுமதிக்கபபட்ட கடிதத்தின்படி கால அவகாசம் 31.12.2023 வரை நீட்டிப்பு செய்து கடன் பெறுவதற்கான ஒப்பந்தம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

பொருளில் தெரிவித்துள்ளவாறு, அரசாணை நிலை எண்.43 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-2) நாள் 28.2.2019ன்படி இத்திட்டத்திற்கான மொத்த தொகை ரூ.296.11 கோடியில் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம் (TNUIFSL) சென்னை மூலம் கடன் தொகை ரூ.60.18 கோடியினை TNUDF ஆசிய வளர்ச்சி வங்கியின் கீழ்

நிதியுதவியுடன் (ADB assisted Tamil Nadu Urban Flagship Investment Program-TNUFIP–Tranche1) பெறுவதற்கு முதன்மைச் செயலாளர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம், கடித எண். TNUDF/Projects/Tirunelveli UGSS/ Phase–II நாள் 01/03/2019 கடிதத்தின் தெரிவித்துள்ள சிறப்பு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு தொகை ரூ.60.18 கோடி கடன் பெறவும், கடன் ஒப்பந்த பத்திரம் மற்றும் Tripartite Agreement-ல் தெரிவித்த நிபந்தனைகளை ஏற்கவும் 07.03.2019ம் தேதி மாமன்ற தீர்மான எண்.242-ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது

மேற்படி TNUIFSL நிதி உதவி மூலம் TNUDF-லிருந்து (ADB Assisted TamilNadu Urban Flagship Investment Program-TNUFIP-Tranche-1) கடன் பெறுவதற்கான ஒப்பந்தம் 10.05.2019ல் நிறைவேற்றப்பட்டு (Agreement executed between Tirunelveli Corporation & TNUITCL) 09.05.2022-ல் கடன் பெறுவதற்கான ஒப்பந்தம் காலாவதியானது. எனவே, கடன் பெறுவதற்கான அனுமதிக்கப்பட்ட கடிதத்தின்படி கால அவகாசம் 31.12.2023 வரை நீட்டிப்பு செய்து கடன் பெறுவதற்கான ஒப்பந்தம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். பி3/5915/2018**

**தீர்மானம் எண்: 47அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.**

---